**பாதஹேவாஹெட பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பாதஹேவாஹெட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபைக்குச் சொந்தமான பொது மயானங்கள் பொது கிணறுகள், மலசல கூடங்கள், சனசமூக மற்றும் கூட்ட மண்டபங்கள் சுமார் 400 அமைந்துள்ள இடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பதவியணிக் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 2,617,650 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம், கணக்கு மீதி ரூபா 2,770,510 தொகை எனினும் ரூபா 152,860 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50,472,000 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருடத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,504,333 ஆகும்.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 செலுத்த வேண்டிய கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 34,428,181 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,074,343 ஆகும்.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போத அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| பிரிவு 134 | 2008 ஆண்டின் பின்னர் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீத வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| விதி 177 மற்றும் 178 | கேள்வி நடைமுறையினை கடைபிடிக்காமல் ரூபா 18,168,487 பெறுமதியான 120 நிர்மாண வேலைகள் சனசமூக அடிப்படை அமைப்புக்களுக்கு சாட்டப்பட்டுள்ளது. |
| (இ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை | |
| XXIV அத்தியாயத்தின் பிரிவுகள் 4.4 மற்றும் 4.5 | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, இறந்துள்ள, சேவை இடைநிறுத்தப்பட்டுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 07 அலுவலர்கள் மற்றும் ஊழியர்களிடம் நீண்ட காலம் முதல் அறவிடப்பட்ட ரூபா 44,725 இற்கு கடன் மீதியொன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,491,520 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,929,587 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 10,438,067 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வீத வரி

(அ) மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் உள்ளவாறு ரூபா 6,154,106 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்டவைகள் ரூபா 2,434,573 ஆகும். இந்த மீதிகளில் ஆண்டின் போது அறவீடு செய்த சதவீதம் முறையே நூற்றிற்கு 50 மற்றும் நூற்றிற்கு 56 ஆக காணப்பட்டமையால், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 4,274,748 ஆகும். அவற்றில் ஒரு வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 3,039,513 இற்கான நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஏக்கர் வரி

-----------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,023,444 இற்கான நிலுவை மீதியொன்று பல வருட காலமாக காணப்படுவதுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கான முறையான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 வாடகை வருமானம்

----------------------------------

சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 389,836 இற்கான நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 நீர்க் கட்டணம்

--------------------------

(அ) சபைக்குச் சொந்தமான நீர் செயற்திட்டம் ஒன்று தொடர்பாக நுகர்வோர் எண்ணிக்கை 3424 ஆக காணப்பட்ட போதிலும் ஆனால் 891 நுகர்வோர்களுக்கு மாத்திரமே நீர் மானி பொருத்தப்பட்டிருந்தது.

(ஆ) உரிய முறைப்படி நீர்க் கட்டணம் அறவிடப்படாமையால் 2014 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 7,570,521 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன், அதற்காக நீர் நுகர்வோருடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பந்தி 02(iv) இன் பிரகாரம் செயற்பட்டு நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

--------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களில் பெறுமதி ரூபா 20,337,089 ஆக காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 2012,2013 மற்றும் 2014 வருடங்களில் சுமார் 63 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கோப்பில் 34 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் அலுவலர்களினால் பல விடயங்களை அணவல் செய்யப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 7,570,521 இற்கான நிலுவை நீர்க் கட்டண மீதியில் பிழையான முறையில் சிட்டையிடப்பட்ட ரூபா 1,123,120 இற்கான அறவிடப்படாத மீதியொன்றும் காணப்பட்டது. இது தொடர்பாக 2013 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக் காட்டிய போதிலும் அதனை சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு பௌதீக வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------

2013 ஆண்டின் போது ரூபா 300,000 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு கொங்கிரீட் தூண்களில் போடப்பட்டு கொங்கிரீட் கூரை வரை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்த நுகலியத்த சனசமூக நிலையத்தின் மீதியான வேலைகளை பூர்த்தி செய்யப்படாமையால், கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூன் 20 திகதி வரையும் பயன்தரு விடயம் ஒன்றிற்கு ஈடுபடுத்தியிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

மொறகொல்ல பல்கரும கட்டிடம் ரூபா 643,656 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு கட்டிடத்தின் மேல் மாடியில் மலசலகூட வசதிகள் ஏற்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் தரையோடு பதிக்கப்பட்ட அல்லது சுவருக்கு வெள்ளை பூசுதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 07 வருமான விடயங்களில் நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 77 வரையும், 08 செலவு விடயங்களில் நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 100 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 பெறுகைகள் திட்டம்

--------------------------------

சபையில் கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பாக பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்துதல்

-----------------------------------------------------------------------------------------------

தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

--------------------------------

தாபனத்தில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) அகக் கணக்காய்வு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்